**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் - 2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – 368 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கி வழங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.


---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை**

**அரசாணை (நிலை) எண்.42**

**நாள் 14.06.2023**
**சோபகிருது, வைகாசி 31**
**திருவள்ளுவர் ஆண்டு 2054**
**படிக்கப்பட்டது:**

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.பி2/3331/ 2023, நாள் 20.04.2023.

******

**ஆணை:**

2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 368 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு தலா ரூ.20,000/- மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக மேலே படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடிதத்தில் 368 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் பள்ளி மாணவியர்களின் உடல் ஆரோக்கியத்திற்காக அவர்கள் தினந்தோறும் உடற்பயிற்சி செய்வது அவசியமாகிறது எனவும், இதனால் அவர்களுக்கு உடல்

நலனும், மன தைரியமும் உண்டாகின்றது எனவும், மேலும் மன அழுத்தத்திலிருந்து விடுபடவும், கல்லூரி படிப்பை முடித்த பின்னர் காவல் துறை, இராணுவம் மற்றும் இரயில்வே உள்ளிட்ட துறைகளில் உள்ள வேலைவாய்ப்பினை நாடும்போது உடற்தகுதிக்கென தனி மதிப்பெண்கள் வழங்கப்படுவதால் அவர்களின் உடலினை உடற்பயிற்சி செய்து வலிமைப்படுத்த அவசியமாகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

3. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கென செயல்பட்டு வரும் 368 பள்ளி மாணவியர் விடுதிகளில் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்களைத் தேர்வு செய்து பரிந்துரைப்பதற்காக மாநில அளவில் கீழ்க்காணும் குழு ஒன்றை அமைக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

1 துணை இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலன்.
2 துணை இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் .
3 நேர்முக உதவியாளர், பிற்படுத்தப்பட்டோர் நலன்.
4 நேர்முக உதவியாளர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.
5 சிறப்பு அலுவலர் (திட்டம்), பிற்படுத்தப்பட்டோர் நலன்.
6 முதன்மை கணக்கு அலுவலர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.
7 கணக்கு அலுவலர், பிற்படுத்தப்பட்டோர் நலன்.
8 கணக்கு அலுவலர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.
9 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அலுவலர் ஒருவர்.

4. இக்குழுவானது தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி கொள்முதல் செய்ய வரைவு ஒப்பந்தப்புள்ளி தயார்செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் எனவும், அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் விளையாட்டு உபகரணங்கள் குறித்த விவரங்களை பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும், மேலும், 368 பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வாங்கி வழங்க ஏற்படும் செலவினத்தொகை ரூ.73,60,000/-க்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் பரிசீலித்து,

i. இணைப்பில் உள்ள விளையாட்டு உபகரணங்களை 368 பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு வாங்கி வழங்க மேலே பத்தி 3-ல் உள்ளவாறு மாநில அளவிலான குழு அமைக்கவும்,

ii. இக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு உபகரணங்களைத் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி வரைவு ஒப்பந்தப்புள்ளி தயார் செய்து கொள்முதல் பணிகளை மேற்கொள்ள அனுமதியும்,

iii. 368 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மாணவியர் விடுதிகளில் இத்திட்டத்தினை செயல்படுத்த தேவைப்படும் மொத்த செலவினமான ரூ.73,60,000/-க்கு (ரூபாய் எழுபத்து மூன்று இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்**

**(ரூ.20000x205 விடுதிகள் = ரூ.41,00,000/-)**

2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் -277 - கல்வி - மாநிலச் செலவினங்கள் – AA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் – 324 – பொருள்களும் வழங்கலும் – 01 - பொருள்களும் வழங்கலும்.
(IFHRMS த.தொ.கு.2225-03-277-AA-32401)

**மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்**

**(ரூ.20000x113 விடுதிகள் = ரூ.22,60,000/-)**

2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 - கல்வி - மாநிலச் செலவினங்கள் - BC-

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் - 324 – பொருள்களும் வழங்கலும் – 01 - பொருள்களும் வழங்கலும்.
(IFHRMS த.தொ.கு. 2225-03-277-BC-32401)

**சீர்மரபினர் நல விடுதிகள்**
**(ரூ.20000x46 விடுதிகள் = ரூ.9,20,000/-)**

2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 80 - பொது - 101 - சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் - மாநிலச் செலவினங்கள் – AF – சீர்மரபினர் மாணவர் இல்லங்களும் உணவு இல்லங்களும் - 324 – பொருள்களும் வழங்கலும் – 01 - பொருள்களும் வழங்கலும்.
(IFHRMS த.தொ.கு 2225-80-101-AF-32401)

**சிறுபான்மையினர் நல விடுதிகள்**
**(ரூ.20000x4 விடுதிகள் = ரூ.80,000/-)**

2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 04 - சிறுபான்மையினர் நலன் – 277 – கல்வி - மாநிலச் செலவினங்கள் – JB – சிறுபான்மையினர் மாணவரில்லங்கள் - 324 - பொருள்களும் வழங்கலும் - 01 - பொருள்களும் வழங்கலும்.
(IFHRMS த.தொ.கு 2225-04-277-JB-32401)

7. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் ரூ.73,60,000/-ஐ 2023-2024 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2023-2024 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2023-2024 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதி [பி, மிபி (ம) சி.ந/வ.செ.பொ.–I]த்

துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண்.21217/நிதி (பி,மிபி(ம)சிந)/2023, நாள் 13.06.2023-ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.252 (இருநூற்று ஐம்பத்து இரண்டு) (IFHRMS ASL No.2023060252)

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர்
நலன், சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு),
சென்னை- **8**.
மாநில கணக்காயர்,
சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 1),
சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 2),
சென்னை-18 (பெயரில்).
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

**நகல்:**
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நல**ன்**, சென்னை- 5.
இயக்குநர், சிறுபான்மையினர் நலன்,
சென்னை-5.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும்
மனிதவள மேலாண்மை) அலுவலகம்,
சென்னை-09.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர்
நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக
உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (சிறுபான்மையினர்
நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலன்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை -9.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை
கூடுதல் தலைமைச் செயலாளர்
அவர்களின் முதுநிலை முதன்மை
தனிச்செயலர், சென்னை - 9.
நிதி (பி, மி.பி (ம) சி.ந/வ.செ.பொது I/II/வ.வ.1)த்
துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14/06/2023
பிரிவு அலுவலர்
14/6/23

1/2

அரசாணை (நிலை) எண்.42, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 14.06.2023-ன் இணைப்பு

**விளையாட்டு உபகரணங்களின் விவரம்**

| S. No | EQUIPMENT |
|---|---|
| 1 | Carrom Board |
| 2 | Chess boards |
| 3 | Shuttle bats |
| 4 | Shuttle corks |
| 5 | Volley Ball with volleyball net |
| 6 | Tennis Balls |
| 7 | Cricket bat & Stumps |
| 8 | Tenni Koit Ring |
| 9 | Football |
| 10 | Football & Small goal posts |

மங்கத் ராம் சர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

14/06/2023
பிரிவு அலுவலர்
14/6/23